RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22427

# நாலடியார் வலியுறுத்தும் கல்வி அறச்சிந்தனைகள்

**ஜெ. மணிகண்டன் [அ, *], சி. கண்மணி [அ]**

[அ] தமிழ்த்துறை, தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) தஞ்சாவூர்-613002. தமிழ்நாடு, இந்தியா

# Educational Ideals Emphasized in the Naladiyar

**J. Manikandan [a, *], S. Kanmani [a]**

[a] Department of Tamil, Tamilavel Umamaheswaranar Karanthai Arts College, (Affiliated to Bharathidasan University), Thanjavur-613002, Tamil Nadu, India

* Corresponding Author: mmanikandanj@gmail.com

Received: 10-05-2022
Revised: 12-09-2022
Accepted: 20-09-2022
Published: 15-10-2022

Check for updates

**ABSTRACT**

The Keelkanaku books which appeared after the Sangam Literature are known as Neethi Literature. Tirukkural, contained among them, is an emperor in the world justice books. Being as the book by Kural Venba got its name 'Kural,' which was made up of four feet of by Naladi Venba also named as 'Naladi' it is referred to as Naladiyar, Naladi Nanuru, Velanvedham. Education for man is in this birth, which is said to be the benefit of this birth, unlike the wealth that gives him tangible things, it does not lack to give, it grows more and more lower than makes him richer. These are the art of words of Jain sages in these Venbakkal however this research paper reveals the information about the ability of both men and women to remove their ignorance and improving knowledge in the fourteenth Chapter "Education" which are based on Naladiar's work, which has ethical thoughts emphasizing the life of the ancient Tamils.

**Keywords:** Education, Absence of Caste, Character of the Superior, Happiness of the mother, Learners of the Skilled Book, Strength of Education

## முன்னுரை

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி: நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி." இப்பழமொழி நாலடியாரின் பெருமையை காட்டும். திருக்குறளின் சிறப்பையும் உணர்த்தும், "நாலு என்பது நாலடியார், இரண்டு என்பது திருக்குறள்." நாலடியாரைத் தொகுத்தவர் பதுமனார் என்னும் புலவர். இவர் சமண சமயத்தவர். இவர் நாலடியாரைப் பால், இயல், அதிகாரங்களாக வகுத்தார். அதற்கொரு பொழிப்புரையும் இயற்றினார் என்கிறார் (Chidambaranar, 2011). திருக்குறளில் உள்ள பல கருத்துக்களை நாலடியாரிலே காணலாம், திருக்குறளில் போலவே நாலடியாரும் மூன்று பால்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது, அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பவை. வாழ்வியல் மேம்பாட்டுச் சிந்தனைகளில் கல்வி கற்பதையும் ஆசிரியனாய் அமர்ந்து கல்வி கற்பித்தலையும், கற்றவாறு ஒழுகுதலையும் அறக்கோட்பாடாகவே நாலடியார் குறிப்பிடுகின்றது. 'கல்வி' என்ற தொழிற்பெயர் கற்றல் என்னும் அறஒழுக்கத்தைக் குறிப்பதாகத் தமிழ் அறநூல்கள் குறிப்பிடுகின்றன. பாரதியார் ஏழைக்குக் கற்பித்தலை அறம் சார்ந்த ஒழுக்கமாகக் குறிப்பிடுகின்றார். இதனைப் பின்வரும் பாடலடிகளில் காணலாம்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்

ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்ன ருள்ள தர்மங்கள் யாவும்

பெயர் விளங்கிட ஒளிரச் செய்தல்

அன்ன யாவினும் புண்ணியம் கொடி

ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்”

என்பது அவர் கூற்று (Gurusamy, 2001). இவ்வாறு கல்வியை உயர்த்திக் கூறுவதும் அதன்வழிச் சமூக நிலையை உணர்த்துவதும், சமூகத்தை முன்னேற்றுவதும் தமிழிலக்கியங்களின் கல்விக் கொள்கையாகவே விளங்குகின்றன. “நாலடியார் வெண்பாக்கள் மிகவும் இனிமையானவை, இந்நூலை இரண்டு மூன்று முறை பொருள் உணர்ந்து படித்தால் போதும் அவ்வளவு வெண்பாக்களும் மனப்பாடமாகிவிடும்” (Chidambaranar, 2011). இதுதான் உயர்ந்த பாடல்களின் தன்மை எனக் கூறப்படுகிறது,

## நாலடியார் வரலாறு சுருக்கமாக

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்,

“அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி

யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்

திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்”

என்று பன்னிரு பாட்டியல் இனவியலின் பொருத்தம் ‘கணக்கு’ சூத்திரத்திற்கு உரையாசிரியர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்கள், “கீழ்க்கணக்கு என்னாமல், “எள்ளறு கீழ்கணக்கு” என்றது என்? எனின், அவை பெரும்பான்மையும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாற் பொருளையும் பற்றி வரும்” என்று விளக்கம் கூறுகின்றனர் (Govindarasa Mudaliyar, 1963). கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் வெண்பாக்களால் பாடப்பெற்றவை. குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப்பெற்றவையாகும். கி.பி.6 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சமணராக வாழ்ந்த அப்பரடிகள் நாலடியாரைப் படித்துச் சில கருத்துக்களை ஆண்டுள்ளார் (Govindarasa Mudaliyar, 1963). எனவே, அப்பர் காலத்திற்கும் நாலடியார் முற்பட்டது. கி.பி.5 ஆம் நூற்றாண்டில் மதுரையில் வச்சிர நந்தி தமிழ்ச் சங்கத்தை வளர்த்தார் (Kandasamy, 2010). மதுரையில் இருந்த சமணச் சான்றோர் பாடியவை நாலடியார் பாக்கள். ஆதலால், கி.பி.5 ஆம் நூற்றாண்டளவில் இவை பாடப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கூறும் அறிஞரின் கருத்து ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். அறத்தின் அடிப்படையில்தான் வாழ்வின் ஒவ்வொரு கூறும் அமையவேண்டும் என்று அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்தினை திருவள்ளுவர் அமைத்துள்ளார் (Kandasamy, 2010).

## வரையறை

அறிஞர் பொற்கோவின் ஆராய்ச்சி நெறிமுறைகள் எனும் நூலில், “வரையறை என்பது அவ்வளவு எளிதல்ல, இருந்தாலும் ஆராய்ச்சியில் வரையறுத்துக் கொண்டால்தான் ஆய்வு சரியாக நிகழ்த்தமுடியும். இந்த வரையறையில் ‘குறை வரையறை’, ‘மிகை வரையறை’ என்று இரண்டு விதமான “குறைபாட்டு வரையறை” உண்டு என்று ஆய்வு வரையறை கூறுகின்றார் (Porgo, 2016). இக்கூற்றின் வழிநின்று கீழ்க்கணக்கு நீதிநூல்கள் 11இல் நாலடியார் நூலினுள் பொருட்பாலில் அமைந்துள்ள 14 ஆம் அதிகாரம் கல்வியில் 131 முதல் 136 வரையிலான 6 பாடல்கள் மட்டும் ஆய்வுக்கட்டுரையின் விரிவஞ்சி இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## கல்வி

நாலடியார் நாற்பது அதிகாரங்களுள் ஒன்றாகக் கல்வியைக் கொண்டுள்ளது. ‘கல்வி’ என்னும் அதிகாரத்தில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முதற்செய்யுள் ‘கல்வி’ மானுட உள்ளத்தின் அழகைச்சுட்டிச் செல்கிறது. “புறத்தூய்மை நீரான் அமையும்” என்பதைப் போல அகத்தூய்மை கல்விகற்று அதன்வழி நடப்பதால் அமையும் என்கிறது செய்யுள் (Parimelzhakar, 2009).

“குஞ்சி அழகும் கொடுந்தாளைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து

நல்லம்யாம் என்றும் நடுவு நிலைமையால்

கல்வி அழகே அழகு”

இவ்வெண்பா, நாலடியாரில் பொருட்பாலின் முதற்பாடலாக அமைந்துள்ளது. இதுவே கல்வி என்னும் அதிகாரத்தின் முதற்செய்யுளுமாகும் (Puliyur Kesikan, 2019).

“தலைமுடியழகும் உடையின் கரையழகும், மெய்ப்பூச்சின் அழகும் அழகுகள் ஆகா. மனத்தில் யாம் நல்லவர்களாக இருத்தல் வேண்டும் நடுவுநிலைக் கருத்தைத் தரும் கல்வியின் அழகே மெய்யான அழகு ஆகும்”

என்று உரையாசிரியர் இச்செய்யுளின் பொருண்மையை விளக்குகின்றார் (Aravanan, 2010). “உடலழகுகள் நம்மைப் பார்க்கும் பிறருக்கே அழகாகத் தோன்றுவன ஆனால் மனத்திற்கு அழகு தருவது கல்வி ஒன்றினால் மட்டுமே அமையும்” என்பது உரையாசிரியரின் கருத்து (Puliyur Kesikan, 2019). குஞ்சி - ஆணின் தலைமயிர். கொடும் தானை - வளைவுடைய ஆடை உடலை வளைத்துச் சூழ்ந்திருப்பதால் கொடுந்தானை எனப்பட்டது. மஞ்சள் - மகளிர்க்குரிய பூச்சு. குஞ்சி, மஞ்சள் என்பது ஆடவர் மகளிர் இருவர்க்கும் உரியது. ஆகவே கல்வி ஆடவர் மகளிர் ஆகிய இருவருக்கும் பொதுவில் அழகு தருவது என உணர்த்துகிறது. ஆயினும் திருக்குறள் ‘கல்வி’யை அரசர்க்குரியதாகக் கூறப்பட்டதெனப் பரிமேலழகர் ‘கல்வி’ அதிகாரத்தின் முகப்பில் குறிக்கின்றார். அது வருமாறு

“அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன: அறநூலும் நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்னும் இவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி, இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும் யாவர்க்கும் உறுதி பயத்தல் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்” என அமைந்துள்ளது (Parimelzhakar, 2009).

## கல்வியின் வலிமை

கல்வி அழியாதது, வலிமை உடையது என வலியுறுத்தும் நாலடியார் அதற்குச் சான்றாக மேலும் ஒரு செய்யுளைக் குறிப்பிடுகிறது. கல்வியின் வலிமையைக் கீழ்க்காணுமாறு எண்ணிடலாம்.

1. கல்வி அனுபவத்தை யாராலும் பறிக்க இயலாது.
2. கல்வியை அரசராயினும் எடுத்தல் இயலாது.
3. பிறருக்குக் கொடுத்தலால் அழிவதில்லை.
4. தம் மக்களுக்குக் கொடுக்கும் செல்வத்தில் உயர்ந்தது கல்வியே.

இந்த நான்கு கருத்துக்களையும் நாலடியார் பாடல் வலியுறுத்துகிறது. முன்னர்க் கூறியது போல் கல்வியை அழிக்க இயலாதென்பதை மேற்கண்ட செய்யுள் குறிப்பிடுகிறது (Parimelzhakar, 2009). அரசன் ஆணையிட்டால் நடக்காதது ஏதும் இல்லை என்பது அன்றைய மரபு. அதுபோலவே அத்தகைய அரச வலிமையாலும் ஒருவன் பெற்ற கல்வியைப் பறிக்க இயலாதென்பது ஆசிரியர் துணிபு. திருக்குறள் இதனை “கேடில் விழுச்செல்வம்” என்கிறது. “அழிவில்லாத சீரிய செல்வமாவது, கல்வி.”

அழிவின்மையாவது: தாயத்தார், கள்வர், வலியர், அரசன் என்று இவரால் கொள்ளப்படாமை. வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம் என்பது இதன் விளக்கப் பொருளாகும்

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு

மாடல்ல மற்றை யவை”

என்கிறது குறள் (Parimelzhakar, 2009).

மேற்கருத்தையெல்லாம் கீழ்க்காணும் செய்யுள் தழுவி நிற்கிறது.

“வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை

மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்

எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன

விச்சைமற் றல்ல பிற.”

இதிற் காணப்படும் பொருண்மை அழிவில்லாத கல்வியின் வலிமையைச் சுட்டுகிறது எனலாம் (Puliyur Kesikan, 2019). கல்வி அறிவுகள் யாராலும் திருடப்பட முடியாது. அதனைக் கேட்போர்க்கும் ஏற்றுக்கொள்வோர்க்கும் கொடுப்பதால் குறைவே படாது அரசாலும் அபகரிக்க முடியாதது. எனவே நல்ல தந்தை தன் புதல்வனுக்குத் தான் இறந்த பின்னர் நிலையாக நிற்கும் பொருள்களாகத் தேடி வைக்க வேண்டிய பொருள்களில் கல்வி அறிவே சிறந்தது (Aravanan, 2010). இதனைத் திருவள்ளுவர், “தந்தை மகனுக்குச் செய்யும் நன்மையாவது கற்றாரது அவையின்கண் முதன்மையாயிருக்கும்படி அவனுக்குக் கல்வி பயிற்றுவித்தல்” என வலியுறுத்தியுள்ளார் என்பதன்வழி உணரலாம் (Subramaniyam Pillai, 2012).

## உயர்ந்தோர் பண்பு

கல்வி கற்ற மனிதனிடத்திலிருந்து கல்வியை பிரிக்க இயலாது என்றும் அது அவனுடைய ஊனோடும் உணர்வோடும் கலந்துவிடும் என்றும் நாலடியார் கல்வியின் செம்மையையும் வலிமையையும் விளக்குகின்றது. மனிதர்களுடைய நடத்தை மாற்றத்திற்கு அவர்களுக்குள்ளே தோன்றியுள்ள நல்லுணர்வும் தீய பண்புகளும் காரணமாய் அமைகின்றன. இவை தொடர்ந்து பின்பற்றும் பழக்கங்களையும் உண்டாக்குகின்றன. அதைப் போல, கல்வி எனும் நற்பண்பு தொடர்ந்து மனித உள்ளத்தில் கலந்து விடுவதால் எதையும் எதிர்கொள்ளும் பண்பு கல்வி உணர்வுக்குக் கிடைக்கிறது. இரண்டாவது செய்யுள் (132). கல்வியின் தனிச்சிறப்பை அல்லது வலிமையை உணர்த்துவதாகக் கொள்ளலாம். இதனை உணர்த்துவதாகப் பின்வரும் பொருண்மைகளைச் சுட்டுகின்றது. கல்வி,

1. இவ்வுலக இன்பத்தைத் தருகிறது.
2. பிறர்க்குக் கற்றுக் கொடுப்பதால் குறையாது.
3. சிறந்த கல்வியாளர்க்குப் புகழை உண்டாக்கும்.
4. கற்றோர் உயிர்க்குக் கெடுதல் செய்யாது.
5. அறியாமையாகிய மயக்கத்தைத் தெளிவுபடுத்தும்.

இவற்றை மூலத்திலிருந்து அறிந்து கொள்ளலாம்.

“இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்

தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்

எம்மை யுலகத்தும் யாங் காணேம் கல்விபோல்

மம்மர் அறுக்கும் மறுந்து”

என்ற செய்யுளே இது (Puliyur Kesikan, 2019). நீதிநூல்கள் இவை போன்ற கருத்துக்களை எடுத்துச் சொல்வதைக் காட்டிலும் அறிவுறுத்தலையே செய்கின்றன. இவ்வெண்பாவுக்கு உரையாசிரியர் குழுவால் எழுதப்பட்ட உரை வருமாறு

"இவ்வுலக சௌக்கியத்தைக் கொடுக்கும் பிறருக்குக் கொடுப்பதனால் குறையும் தன்மையை உடையதன்று கற்றவராகிய தம்மை எங்கும் புகழ்பெறச் செய்யும். தாம் உயிரோடிருக்கக் கெடுதலை உடையதன்று. எத்தன்மையான உலகத்திலும் கல்வியைப் போல் மயக்கத்தை அறுக்கும்படியான மயக்கத்தை யாம் கண்டோமில்லை" எனக் காணப்படுகிறது (Aasiriyar Kuzhu, 2020).

நீதிஇலக்கியம் மிகுதியும் மக்களை அறிவுறுத்தும் நோக்கில் அமைகின்றன. இவை பயன்படுத்தும் உத்திமுறைகளில் 'அறிவுறுத்தல்' மேலிட்டு நிற்கின்றது. இது இலக்கியப் பண்புகளுள் ஒன்றாக, க.த. திருநாவுக்கரசு கூறியதனை ஓர் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். மேற்குறித்த செய்யுள் எடுத்துக்கூறல் உத்தியைப் பயன்படுத்திப் பாடப்பட்டதாக தெளியலாம் (Gnanamani, 2014).

தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலில் "அறுவகைப் பட்ட, பார்ப்பனப் பக்கமும்" (Ilampooranar, 2004) என்ற வாகைத்திணையில் வரும் நூற்பாவினை விளக்குமுகத்தான் ஆறு திறனன்களில் முதல் திறமாகிய 'ஓதலாவது' கல்வி என்பதன் ஒழுக்கம் மேன்மையைக் குறிக்கும் வகையில் உரையாசிரியர் இளம்பூரணர் நாலடியார் பாடல் 132ஐ மேற்கோள் காட்டிச் சுட்டிக் காட்டியுள்ளார். இஃது கல்வியின் மேன்மையை வலியுறுத்தியுள்ளது இவண் எண்ணத்தக்கது (Gnanamani, 2014).

உப்புக் களர் நிலத்தில் தோன்றினாலும் சான்றோர் அது பிறந்த நிலத்தை எண்ணாமல் உயர்வாகப் போற்றுவர். அதுபோலவே சமூகத்தில் கீழ்நிலையில் ஏழை எளியவர்களாகப் பிறந்திருப்பினும் அவர்கள் கற்றவராயிருப்பின் அவர்களை உயர்வாக எண்ணிச் சான்றோர் மதிப்பர் என்பது பின்வரும் பாடல் கூறும் கருத்தாகும். இக்கருத்தை விளக்கும் அப்பாடல்,

"களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்

விளைநிலத்து நெல்லின் விழுமிதாகக் கொள்வர்

கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்

தலைநிலத்து வைக்கப் படும்"

எனக் காணப்படுகிறது. 'கடைநிலத்தோர்' என்பது சமூகத்தரத்தில் தாழ்வானவராக இருப்பானும் என்பதை உணர்த்தும். "தலைநிலம் - கல்வியினால் உயர்வு பெற்றோர்." மனிதனின் தகுதியை அவன் பிறக்கும் இடம் தீர்மானிப்பதில்லை என்ற சிறப்புக் கருத்தினை பெறமுடிகிறது (Puliyur Kesikan, 2019).

மேற்குறித்த கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில், "எக்குடியிலே பிறந்தோராயினும் கற்றறிந்தவரைச் சிறந்தவராகக் பாராட்ட வேண்டும் அறிவும் ஒழுக்கமுமே மக்களுக்கு மதிப்பைத் தரும் பிறப்பு மட்டுமன்று. இச்சிறந்த கொள்கையும் நாலடியார் எடுத்துரைக்கின்றது" என்கிறார் (Chidambaranar, 2011).

இச்செய்யுள், கல்வி கற்றவர்கள் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுவார்கள் என்பதையும் கல்வி, அறிவு ஒழுக்கங்களால் பிறப்பினால் ஏற்படும் உயர்வு தாழ்வுகள் ஒழியும் என்பதையும் வலியுறுத்துவதாகக் கொள்ளலாம்.

## தேர்ந்த நூல் கற்போர்

மனித வாழ்க்கைக்கு கல்வி தேவை என்பதை உணர்த்த நாலடியார்,

"கல்வி கரையில கற்பவர் நாள்சில

மெல்ல நினைக்கின் பிணிபல-தெள்ளிதின்

ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீர்ஒழியப்

பாலுண் டுருகின் தெளிந்து"

எனக் குறிக்கின்றது (Puliyur Kesikan, 2019). இதற்குப் பொருளெழுதும் ஆசிரியர் குழு,

"கல்விகள் முடிவில்லாதன பொறுத்து யோசித்தால் கற்பவர்களுடைய வாழ்நாள் குறைவு, நோய்பலவும் மனிதர்கட்கு (கற்போர்) வந்து சேரும். அதனால், நீரை நீக்கிப் பாலையே அருந்தும் அன்னப் பறவை போல நல்ல நூல்களைத் தேர்ந்து சான்றோர் கற்பர்" எனக் குறிக்கின்றது (Aasiriyar Kuzhu, 2020). நூல்கள் எண்ணற்றவை. துறைதோறும் பற்பல நூல்கள் பெருகிக் கொண்டே வருகின்றன. அவற்றையெல்லாம் கற்பது தனி ஒருவரால் இயலாது. எனவே தேவையான நூலைத் தேர்ந்து கற்றல் வேண்டும் என்பது நல்ல அறிவுரையாகக் காணப்படுகிறது. இஃது அறிவுறுத்தல் என்னும் உத்தி அமைந்த செய்யுள் (make it a strategy of instruction) எனலாம்.

## சாதி எண்ணுதலில்லை

செய்கின்ற தொழிலைக் கொண்டு சாதியை எண்ணுவது தற்காலச் சமூகத்தில் காணப்படும் ஒரு மனநிலை. இது நாலடியார் போன்ற நூல்கள் எழுந்த காலத்திலும் இந்த நடைமுறை இருந்ததை அறியமுடிகிறது. ஆற்றில் தோணி ஓட்டுபவனின் தொழிலைப் பார்த்து அவன் தாழ்ந்த குலம் எனக் கருதப்பட்டிருந்தது. இதனை நாலடியார் மறுக்கிறது. பழமையான கடைப்பட்ட சாதியிற் பிறந்தாலும் அவன் கற்றவனாய் இருப்பினும் மற்றவர்க்குத் துணையாக இருப்பான். தோணி செலுத்துபவன் ஆற்றில் பயணம் மேற்கொள்வோர்க்குத் துணையாய் இருப்பது போலக் கற்றவரும் யாவர்க்கும் துணையாய் இருப்பர் எனப் பின்வரும் செய்யுள் விளக்குகின்றது.

"தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்

காணிற் கடைப்பட்டான் என்றிகழார் - காணாய்

அவன்துணையா ஆறுபோ யற்றேநூல் கற்ற

மகன்துணையா நல்ல கொளல்"

இதற்குமுன் ஆராய்ந்த செய்யுட்களில் 'சாதி' பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. இதில் 'தோணி இயக்குவான்' வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது (Puliyur Kesikan, 2019). இச்செய்யுளுக்குக் கருத்துரையாகக் "கற்பிக்கும் ஆசிரியனின் சாதியைப் பாராதே! அவன் கற்றுள்ள கல்வியின் ஆழத்தைப் பார்" என்பதாலும் சமணர், சாதி மறுப்பாளர் என்பதைக் "களர்நிலத்து..." எனத் தொடங்கும் கல்வி அதிகாரத்தின் மூன்றாம் பாடல் உணர்த்துவதன் வழி ஒப்புநோக்கிக் கொள்ளலாம் என்று அறிஞர் குறிப்பிடுகிறார் (Aravanan, 2010).

## தாய் மகிழ்வு

புறநானூற்றில் "வேற்றுமை தெரிந்த நாற்பால்" நால் வருணம் கூறப்பட்டது (Saminatha Iyyar, 1971). நால் வருணம் என்பது "பார்பார், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகையினையும், நாற்பால் எனப்பட்டது. இது வடவாரியப் பகுப்பு முறை, தமிழகத்தில் தமிழ் மக்களிடையே இப் பாகுபாடு இன்று கிடையாது," என்று விளக்கம் கூறப்படுகிறது (Duraisamy Pillai, 2009). இந்நால் வருணத்தில் கீழ்நிலையில் இருப்பவர் கற்றவராயின் அவரை உயர்வாக எண்ணுவதை செய்யுள் குறிப்பிடுகிறது. அதற்குக் குறிப்புரை எழுதிய உ.வே.சா. மேற்குறித்த நாலடியார் பாடலைக் (136) காட்டுகின்றார்.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே

பிறப்பே ரன்ன உடன்வயிற் றுள்ளும்

சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்

மூத்தோன் வருக என்னா தவருள்

அறிவுடையோ னாறு அரசும் செல்லும்

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்

மேற்பா லொருவனும் அவன்கண் படுமே"

எனக் குறிப்பிடுகின்றது. பெற்ற தாயும் கல்வி கற்ற மகனின் தன்மையால் சிறப்பாள் என்றும் கற்றவன் சொல்கிற வழியில் அரசனும் செல்வான் என்றும் இச்செய்யுள் குறிப்பிடுவது இவண் எண்ணத்தக்கது. இவையாவும் கல்வி பெறுவதால் உண்டாகும் சிறப்பினை எடுத்துரைப்பதாகும் (Saminatha Iyyar, 1971).

"ஒருகுடியில்

கல்லாது மூத்தானைக் கைவிட்டுக்

கற்றான் இளமை பாராட்டும் உலகு"

என்று நான்மணிக்கடிகையும் இதனை வலியுறுத்துகின்றது. கல்வி பற்றிய நாலடியார் சிந்தனைகளில் இது குறிப்பிடத்தக்கதாகும் (Aravanan, 2010). சமூகச் சமத்துவத்தை ஏற்படுத்தும் கருவியாகக் கல்வி பார்க்கப்படுகிறது. 'தாயும் மனந்திரிவாள்' என்பதில் வரும் உம்மை முற்றுமையாகக் கொள்ளல் வேண்டும். இதனை,

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்

கடையரே கல்லா தவர்"

என்ற குறளுக்கு விளக்கமளிக்கும் பரிமேலழகர், "பொய்யாய மானம் நோக்கி மெய்யாய கல்வி இழந்தார், பின் ஒருஞான்றும் அறிவுடைய ராகாமையின் 'கடையரே' என்றார்" என்றெழுதுகின்றார் (Parimelazhakar, 2009).

## முடிவுரை

மனத்தில் அழகினை உண்டாக்கி மானிடரைச் சிறக்கச் செய்கிறது உலகில் தோன்றிய எவராயினும் கல்வி கற்றே ஆக வேண்டும் கல்வி கற்ற எவரிடமிருந்தும் கல்வியைப் பிரிக்க முடியாது கல்வி உலக இன்பத்தைத் தரவல்லது அறியாமை என்னும் மயக்கத்தினைத் தெளிவுபெறச் செய்கிறது ஏழை எளியராகச் சமூகத்தில் கீழ்நிலையில் இருப்பினும் கற்றவராயின் சான்றோர் மதிப்பர் என்றும் கல்வி கற்றவர் மனத்தில் நல்ல நடுவுநிலையையும், அழகையும். நற்பண்பினையும், எதையும் எதிர்கொள்ளும் திறத்தினையும், உலகில் எங்கு சென்றிடினும் புகழ்பெறச் செய்யும். எவர் செல்வமும் எப்பொழுதாகினும் திருடு போய்விடும் ஆனால் கல்விச் செல்வத்தை யாராலும் ஒருவனிடமிருந்து அபகரிக்கவும் அழிக்கவும் முடியாததாகும். ஆகவே, சமூகத்தில் மக்கள் தம் வாழ்வில் உயரிய குறிக்கோளும் நோக்கமும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் அவ்வாறு செயல்படும்பொழுது குடும்பமும் அரசியலும் யாவையும் கல்வி நலத்தால் சிறப்படையும்.

## References

Aasiriyar Kuzhu, (2020) Samanamunivarkal Iyertriya Naaladiyar Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Aravanan, K.P. (2010) Puthiya Paarvaiyil Pathinenkeelkanakku Naaladiyar, Thamizhkottam, Chennai, India.

Chidambaranar, Samy. (2011) Thamizhar Vaazhvum Panpaadum, Saradha Pathippagam, Chennai, India.

Duraisamy Pillai, Avvai, (2009) Puranaanooru Moolamum Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Govindarasa Mudaliyar, K.R. (1963) Panniru Pattiyal, The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Tinnevelly, India.

Gurusamy, M.R.P. (2001) Bharathi Paadalgal: Aaivuppathippu, Tamil University, Thanjavur, India.

Ilampooranar, (2004) Tholkappiyam Porulathikaram (Agathinaiyiyal – Purathinaiyiyal), The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, India.

Kandasamy, C.N. (2010) Ulaga Chemmozhigal Iyakkiam vol.I, Tamil University, Thanjavur, India.

Porgo, (2016) Aaraichi Nerimuraigal, Iynthinai Pathipagam, Chennai, India.

Puliyur Kesikan, (2019) Samanamunivarkal Iyerrtiya Naaladiyar Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Saminatha Iyyar, U.Ve. (1971). Puranaanooru Moolamum Uraiyum, U.Ve. Saminathar Noolnilayam, Chennai, India.

Subramaniyam Pillai, Ka. (2012) Thirukkural Moolamum Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Parimelzhakar, (2009) Thirukkural Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License